# கல்லூரி மாணவர்களுக்கு துணை முதலமைச்சரின் புத்தாண்டுப் பரிசு!







"10 இலட்சம் மாணவர்களுக்கு ஜனவரி புத்தாண்டு விடுமுறை முடிந்து திரும்பியதும் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்படும்" என்று மாண்புமிகு துணைமுதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். தமிழ்நாட்டுக் கல்லூரி மாணவர்களின் புத்தாண்டுக்கு புத்தொளி பாய்ச்சியுள்ளார் நமது கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள்!

கல்லூரி மாணவர்களுக்குப் பயன்படும் வகையில், செயற்கை நுண்ணறிவுக்கு (AI) ஏற்ற அதிவேக Processor மற்றும் நீண்டநேரம் தாங்கும் Battery என நவீனத் தொழில்நுட்பங்களுடன் இந்த 'லேப்டாப்' தயாரித்து வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார் மாண்புமிகு துணை முதல்வர். கல்லூரி மாணவர்கள் வாழ்வில் ஒளியேற்ற ஈரோட்டுக் கண் கொண்டு செயல்படுத்தப்படும் இத்திட்டம் காவிக் கண்களை உறுத்துகிறது.

3ஆம் வகுப்பில் பொதுத்தேர்வு, புதிய கல்விக் கொள்கை, விஷ்வகர்மா திட்டம் என்று மாணவர்களின் வாழ்க்கைக் கனவுகளைக் காவுகேட்கும் மோடியுடைய பாசிச பா.ஜ.க.வின் கூட்டாளி, இனத்துரோகி எடப்பாடி பழனிசாமியும் தன் மடியிலே நெருப்பைக் கொட்டிக்கொண்டது போல கதறுகிறார்.

தேர்தல் காலம் என்பதால் லேப்டாப் தரப்படுகிறதா? கடந்த 2025-26 பட்ஜெட் தொடரிலேயே 20 இலட்சம் மாணவர்களுக்குக் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஆனால் ஆக்கப்பூர்வமான உரையாடலை விரும்பாமல் பாதியிலேயே ஓடிவிடும் எடப்பாடி பழனிசாமிக்கு அது தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அந்தப் பேரவைக் குறிப்புகளையும் செய்தி படித்த நியூஸ் பேப்பரையும் அவர் பண்ணை வீட்டு அலமாரியில் ஒளித்துவைத்து விட்டார்கள் போல. "ஆண்டின் நடுவே ஏன் தருகிறீர்கள்?" என்று கேட்கும் எடப்பாடி. ஒரு வேளை, "ஆண்டின் நடுவே ஏன் செமஸ்டர் நடத்துகிறீர்கள்?" என்று கேட்டாலும் கேட்பார்.

மாணவர்களுக்குச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கப் பாடுபடும் கழகத் தலைவரின் 'திராவிட மாடல்' அரசாங்கத்தின் சாதனைத் திட்டங்களால் பயன்பெறும் ஏழை எளியோர் மீது அக்கறை இருக்கும் அத்தனைபேரும் விலையில்லா மடிக்கணினிகள் அறிவிப்பைக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

பத்தாண்டு கால அ.தி.மு.க. அவல ஆட்சியைத் துடைத்தெறிய விடியலைத் தேர்ந்தெடுத்த மக்களுக்குத் தொழில்நுட்ப வசந்தத்தைக் கொடுக்கிறது நமது கழகத் தலைவர் தலைமையிலான 'திராவிட மாடல் அரசு!' முன்னேற்றச் சாரலைப் பொழிகிறது கழக அரசு!



**தமிழ் கா.அமுதரசன்**
மாநில துணைச் செயலாளர்–
தி.மு.க. மாணவர் அணி

---

## 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – ஒத்துஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் 6 ஒன்றியங்களில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள்!



100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் - ஒத்து ஊதும் அ.தி.மு.க. வைவும் கண்டித்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்ளை வருகிற 24.12.2025 அன்று காலை நடத்திட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள குன்றத்தூர், திருப்பெரும்புதூர், புனித தோமையார்மலை வடக்கு, திருப்போரூர், காட்டாங்கொளத்தூர், திருக்கழுக்குன்றம் வடக்கு ஆகிய 6 ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் வருகிற 24.12.2025 - புதன்கிழமை, காலை 10 மணியளவில், கீழ்க்கண்ட விவரப்படி ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அ.தி.மு.க. வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

| வ. எண். | ஊராட்சி ஒன்றியம் பெயர் | கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1. | குன்றத்தூர் | பேருந்து நிலையம் படப்பை |
| 2. | திருப்பெரும்புதூர் | பேருந்து நிலையம் அருகில் திருப்பெரும்புதூர் |
| 3. | புனிததோமையார்மலை வடக்கு | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு, சிட்லப்பாக்கம் |
| 4. | காட்டாங்குளத்தூர் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில், காட்டாங்கொளத்தூர் |
| 5. | திருப்போரூர் | அம்பேத்கர் சிலை அருகில் ரவுண்டானா, திருப்போரூர் |
| 6. | திருக்கழுக்குன்றம் வடக்கு | பேருந்து நிலையம், திருக்கழுக்குன்றம் |

இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை அந்தந்த ஒன்றியங்களின் கழகச் செயலாளர்கள் இணைந்து நடத்திட வேண்டும், அந்தந்த ஒன்றியங்களில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் அழைத்து பேசி முறையாக ஆர்ப்பாட்டம் பற்றி துண்டறிக்கையை அச்சிட்டு,

நம்முடைய கழக நிர்வாகிகளுக்கு, கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கு தந்து அனைவரையும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க உரிய ஏற்பாடுகளை செய்து வெற்றிகரமாக இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

---

# நொச்சிக்குப்பத்தில் "ஒன் ஸ்டாப் சென்டர்" வேண்டும்!
## ஒன்றிய அமைச்சரிடம் – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. மனு!



புதுடெல்லி, டிச.20-

தென் சென்னை மக்களவைத் தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறை மந்திரி அன்னபூர்ணா தேவியை டெல்லியில் நேரில் சந்தித்து ஒரு மனு அளித்தார். அந்த மனுவில் கூறப்பட்டு இருப்பதாவது:

மிஷன் சக்தியின் சம்பவ் துணைத் திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு மாவட்டம், பெரும்பாக்கத்தில் பெண்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆதரவு வழங்கும் ஒரு ஒன் ஸ்டாப் சென்டர் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டதற்கு மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள நொச்சிக்குப்பத்திலும் ஒரு ஒன் ஸ்டாப் சென்டர் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆயிரக்கணக்கான மீனவர் குடும்பங்கள் வசிக்கும் கடலோரப் பகுதியான நொச்சிக்குப்பத்தில், ஆலோசனை, சட்ட உதவி, குறுகிய கால தங்குமிடம், மருத்துவ உதவி மற்றும் வேலை வாய்ப்பு மற்றும் கல்விக்கான இணைப்புகள் போன்ற ஒருங்கிணைந்த சேவைகளை வழங்க அணுகக்கூடிய ஒன் ஸ்டாப் சென்டர் தேவை என்று பல மாதங்களாக அரசு பரிந்துரைத்து வருகிறது. சென்னை மற்றும் தாம்பரத்தில் தற்போதுள்ள வசதிகள் தொலைவில் உள்ளன.

மேலும் உள்ளூர் கோரிக்கைகளை திறம்பட பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. இங்கு ஒன் ஸ்டாப் சென்டர் தேவைப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு சரியான நேரத்தில் ஆதரவை உறுதி செய்யும், இது மாநில முயற்சிகளை நிறைவு செய்கிறது.

எனவே இதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் தி.மு.க. சார்பில் மாவட்ட கழக அலுவலகத்தில் இனமானப் பேராசிரியர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ் சந்திரன் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் உடன் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

---

## "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" – இன்று
# சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள்!
### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை, டிச.20

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 அன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற தி.மு.க. மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல் திட்டத்தின் படி இன்று (20.12.2025 சனிக்கிழமை) சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரத்தினை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

**கொளத்தூர் கிழக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 67அ, பாகம்: 131. இடம்: எண்.43, திரு.வி.க.நகர் 3வது தெரு, பெரம்பூர், சென்னை-11.

மாலை: 4.30 மணி: வட்டம் 67அ, பாகம்: 132. இடம்: எண்.328, திரு.வி.க.நகர் 19வது தெரு, பெரம்பூர், சென்னை-11.

மாலை: 5.00 மணி: வட்டம் 67அ, பாகம்: 133. இடம்: எண்.190, திரு.வி.க.நகர் 15வது தெரு, பெரம்பூர், சென்னை-11.

மாலை: 5.30 மணி: வட்டம் 67அ, பாகம்: 134 இடம்: 73/1, திருவள்ளுவர் தெரு, பெரம்பூர், சென்னை-11.

**கொளத்தூர் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 64அ, பாகம்: 25. இடம்: ஜகநாதன் தெரு, ராஜாஜி நகர், கொளத்தூர், சென்னை-49.

மாலை: 4.30 மணி: வட்டம் 64அ, பாகம்: 26. இடம்: சாஸ்திரி அவென்யு, வில்லிவாக்கம், சென்னை-49.

மாலை: 5.00 மணி: வட்டம் 65அ, பாகம்: 14. இடம்: சாஸ்திரி தெரு, வெங்கடேஸ்வரா நகர், கொளத்தூர் -99.

மாலை: 5.00 மணி: வட்டம் 65அ, பாகம்: 41. இடம்: 7வது தெரு, பூம்புகார் நகர், கொளத்தூர் -99.

மாலை: 5.30 மணி: வட்டம் 69, பாகம்: 219. இடம்: 20வது தெரு, G.K.M.காலனி, சென்னை-82.

**துறைமுகம் கிழக்கு பகுதி**

மாலை: 5.00 மணி: வட்டம் 56அ, பாகம்: 82, 83, 84, 85. இடம்: எண்.55/24, சையவமுத்தையா தெரு, மண்ணடி, சென்னை-1.

**துறைமுகம் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 54அ, பாகம்: 29, 30, 31. இடம்: பி.கே.ஜி 4வது சந்து, அண்ணா பிள்ளை தெரு, சென்னை.

**எழும்பூர் வடக்கு பகுதி**

மாலை: 5.00 மணி: வட்டம் 99, பாகம்: 4, 5, 6

**எழும்பூர் தெற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 108, பாகம்: 114, 115, 120. இடம்: வெங்கடாசலபதி தெரு, செனாய் நகர்.

**திரு.வி.க.நகர் வடக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 71, பாகம்: 17, இடம்: எண்.2/3, அண்ணாசாமி தெரு, பெரம்பூர்.

மாலை: 4.30 மணி: வட்டம் 71, பாகம்: 19, இடம்: எண்.40, வெங்கட்ராமன் தெரு, பெரம்பூர்

மாலை: 6.00 மணி: வட்டம் 71அ, பாகம்: 102, இடம்: எண்.3, கோவிந்தன் தெரு, அருந்ததி நகர்.

மாலை: 6.30 மணி: வட்டம் 71அ, பாகம்: 103, இடம்: தாசரி தெரு, அருந்ததி நகர்

மாலை: 7.00 மணி: வட்டம் 71அ, பாகம்: 104, இடம்: வீரராகவன் தெரு, அருந்ததிநகர்

மாலை: 7.30 மணி: வட்டம் 71அ, பாகம்: 112, இடம்: கர்நாடிக் மில் குடியிருப்பு

மாலை: 8.00 மணி: வட்டம் 71அ, பாகம்: 117, இடம்: ரங்கப்பன் தெரு, அருந்ததி நகர்

**திரு.வி.க.நகர் தெற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 76, பாகம்: 88, 89, 90

மாலை: 4.30 மணி: வட்டம் 76அ, பாகம்: 191, 192, 193

**வில்லிவாக்கம் கிழக்கு பகுதி**

மாலை: 4.30 மணி: வட்டம் 96, பாகம்: 196. 197, 206. இடம்: அப்பாதுரை 1வது சந்து, 2வது சந்து அப்பாதுரை மெயின் தெரு, பாரத மாதா தெரு, ஆனந்த வினாயகர் 1வது தெரு, 2வது தெரு, 3வது தெரு, பொன்னுசாமி தெரு, புசனம் தெரு.

மாலை: 5.00 மணி: வட்டம் 98அ, பாகம்: 214, 215, 216. இடம்: மேட்டு தெரு, மெயின் தெரு, மேட்டு தெரு, ரங்கப்பா தெரு, நாராயண தெரு.

**வில்லிவாக்கம் மேற்கு பகுதி**

மாலை: 5.00 மணி: வட்டம் 94அ, பாகம்: 16, 41, 63 , இடம்: பேரேரி சந்து, பலராமபுரம், அன்னைசத்தியா நகர்.

மாலை: 6.00 மணி: வட்டம் 94ஆ , பாகம் 30, 31, 37 இடம்: ராஜமங்கலம் 6வது தெரு, 8வது தெரு, வடக்கு ரெட்ஹில்ஸ் ரோடு.

**அம்பத்தூர் வடக்கு பகுதி.**

மாலை: 4.00 மணி: வட்டம் 86 , பாகம் 230, இடம்: நியு ஹவுசிங் போர்டு

மாலை: 4.30 மணி: வட்டம் 86 , பாகம் 231 , இடம்: துளசி தெரு

மாலை: 5.00 மணி: வட்டம் 85 , பாகம் 158, இடம்: நடேசன் முதலி தெரு

மாலை: 5.30 மணி: வட்டம் 85 , பாகம் 161 , இடம்: கல்யாணி அம்மாள் தெரு

மாலை: 6.00 மணி: வட்டம் 81 , பாகம் 132, இடம்: வடக்கு பூங்கா தெரு

மாலை: 6.00 மணி: வட்டம் 81, பாகம் 133, இடம்: தெற்கு பூங்கா தெரு

மாலை: 7.00 மணி: வட்டம் 80 , பாகம் 99, இடம்: பிரகாஷ் நகர் சேரன் தெரு

மாலை: 7.30 மணி: வட்டம் 80 , பாகம் 8 , இடம்: பானுநகர் - முதல் மெயின் தெரு

மாலை: 8.00 மணி: வட்டம் 79 , பாகம் 11, இடம்: டி.வி.ஏழுமலை தெரு, எஸ்.வி.நகர்

மாலை: 8.30 மணி: வட்டம் 79அ , பாகம் 113 , இடம்: முதல் மெயின்ரோடு, லெனின்நகர்.

**அம்பத்தூர் தெற்கு பகுதி.**

மாலை: 5.00 மணி: வட்டம் 88 , பாகம் 279, இடம்: பார்க் ரோடு, திருமூர்த்தி நகர்அருகில்

மாலை: 5.30 மணி: வட்டம் 88 , பாகம் 280, இடம்: பார்க் ரோடு சர்ச் அருகில்

மாலை: 7.00 மணி: வட்டம் 93 , பாகம் 337, இடம்: 2வது பிளாக், வளையாபதி சாலை

மாலை: 7.30 மணி: வட்டம் 93 , பாகம் 338, இடம்: 2வது பிளாக், நக்கீரன் சாலை

மாலை: 6.30 மணி: வட்டம் 87 , பாகம் 261, இடம்: மெயின் ரோடு, இளங்கோ நகர், பாடி

மாலை: 6.30 மணி: வட்டம் 87 , பாகம் 286, இடம்: ஈஸ்வரன் கோயில் தெரு, ஜகதாம்பிகை நகர், பாடி.

மாலை: 6.00 மணி: வட்டம் 90 , பாகம் 309, இடம்: பெரியார் நகர், பாடிகுப்பம் ரோடு.

மாலை: 6.00 மணி: வட்டம் 90 , பாகம் 312, இடம்: பெரியார் நகர், பாடிகுப்பம் ரோடு.

**அம்பத்தூர் கிழக்கு பகுதி.**

மாலை: 5.00 மணி: வட்டம் 84அ , பாகம் 194, இடம்: மாரியம்மன் கோயில் தெரு, கொரட்டூர், சென்னை-80.

மாலை: 5.30 மணி: வட்டம் 84அ , பாகம் 199, இடம்: போத்தியம்மன் கோயில் தெரு, கொரட்டூர், சென்னை-80.

மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ பகுதி / வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் இனமானப் பேராசிரியர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் கே.திராவிட பக்தன், உதயமலர் பாண்டியன், பா. சிட்டிபாபு, கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், க.அரிகிருஷ்ணன், பிரகாஷ் ஞானஒளி, தா.மோதிலால், மற்றும் நகர கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அடையாளம் பட்டு, வானகரம் ஊராட்சியில் பாகம் எண்கள். 64, 94 யில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் ஆலோசனைப்படி, "என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க. கணபதி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இதில் ஒன்றியச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி ஏற்பாட்டில் நடந்த நிகழ்ச்சியில் கௌரிசங்கர், க.சங்கர், எஸ்.பி.அருள், ஜெயச்சந்திரன், ரவி, சதீஷ்குமார், செந்தில்குமார், பிரபாகரன், சகிலா இரா.வினோத் மற்றும் பி.எல்.ஏ.2, பி.டி.ஏ. நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


**தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 138 | மே.பொ / சி.பரா / வ.செ.அ.மி.நி-1 | Providing potable water for drinking water to Athipattu Camp at NCTPS-I |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in**

**செ.ம.தொ.இ/6748/ஒப்பந்தப்புள்ளி/2025**


# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஆந்திரா கே.ஏ.முனுசாமி
### டிசம்பர் 20 (2016)



**எட்டு வயதிலேயே சுயமரியாதைக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, அஞ்சா நெஞ்சராக உருவாகி, தி.மு.கழகம் துவங்கப்பட்ட ஒரு சில மாதங்களிலேயே, பல எதிர்ப்புகளை மீறி, ஆந்திர மாநிலத்தில் சில மாவட்டங்களில் கழகத்தின் கிளைகள் துவக்கி கழகக் கொடி ஏற்றி வைத்தவர்.**

**ஆந்திர மாநிலத்தில் பல மாவட்டங்களில் 1954 முதல் 1971 வரை 500க்கும் மேற்பட்ட கிளைக் கழகங்களைத் தொடங்கியதோடு, 1966ஆம் ஆண்டு ஆந்திர மாநிலப் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆந்திர மாநிலக் கழக அமைப்பாளராக இருபது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து பொறுப்பு வகித்தவர்.**

**2007ஆம் ஆண்டு, ஈரோட்டில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் அண்ணா விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**